# மகோற்சவ தோத்திரங்கள்



மகோற்சவ காலத்தில் ஓதுவதற்காய
முக்கிய தோத்திரங்களை இம்மலருள்ளடக்கி
யுள்ளமையால் இதைப் போற்றிப் பாதுகாப்பது
தங்கள் கடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணப்பதிகம்
## (ஒழியா இன்பத்து உவகை)

" பாருரு வாய பிறப்பற வேண்டும்,

பத்திமையும் பெறவேண்டும்

சீருரு வாய சிவபெருமானே,

செங்கம லம்மலர் போல்

ஆருரு வாய என் ஆரமு தேஉன்,

அடியவர் தொகை நடுவே

ஓருரு வாய நின் திருவருள் காட்டி,

என்னையும் உய்யக் கொண்டருளே"

(மாணிக்கவாசக சுவாமிகள் - 599)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை நடராசா சிவபாக்கியம்

தாய்மடி

1933 . 04 . 28



இறைவனடி

2014 . 12 . 24

திதி - ஜய வருடம் மார்கழி மாதப் பூர்வபக்கத் திருதியை

"நினைப்பும் மறப்பும் இல்லாதார் நெஞ்சம்
தனைப்பிரியாது சிவம்"

- ஔவைகுறள் 207 -

23.01.2015
சாரையடி
புலோலி

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



*சிவமயம்*

# தோத்திரப்பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் அயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிலோடு இசைபாடல் மறந்தறியென்
நலம் நீங்கிலும் முன்னே மறந்தறியென்
உன்னாமம் என் நவில் மறந்தறியேன்
உலர்ந்தார் தலையில் பலி கொண்டுலுழலிவாய்
உடலில் உறுகூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துளையம்மாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே யப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடிததேன்
எங்கெழுந் தருளுவதினியே

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப்பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரமன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஞானத்தின் திரு உருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையின்றி மண்ணில் வளர்மதிக் கொழுந்தை
தேனக்க மலர்க் கொன்றை செஞ்சடையார் சீர் தொடுக்கும்
கானத்தின் எழு பிறப்பைக் கண்பனிப்பக் கண்டார்கள்.

## திருப்புகழ்

எதிரிலாத பக்தி தனை மேவி
இனியதாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிரகாம வெற்பி லுறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# தோத்திரப்பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெப்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

## தேவாரம்

கருவாகிக் குழம் பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வென்ளெலும்பும் சேர்ந்தொன்றாகி
உருவாகிப் புறப்பட்டிங் கொடுத்தி தன்னால்
வளர்கப் பட்ருயிராறுவ் கடை போகாரால்
மருவாகி நின்னடியே மறவேனம்மான்
மதித் தொருகாற் புறப்புண்டேல் மறவா வண்ணம்
திருவாரூர் மணவாளா திருத்தெங்கூராய்
செம் பொனே கம்பனே நினைத்திட்டேனே.

## திருவாசகம்

வேண்டத் தக்க தறிலோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டு மயன் மாற் கரியோய் நீ
வேண்டி யென்னைப் பணி கொண்டாய்
வேண்டி நியா தருள் செய்தாய்
யானு மதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன்றுண் டென்னில்
அதுவு முன்றன் விருப்பன்றே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஞையாத மனத்தினனை ஞைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப் போந்த அன்று முதல் இன்று வரை
கை யாரத் தொழு தருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் தரை லோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கண்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடி குடி
ஈசற்காட் செய்ம்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருளவில
தோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் மின்று மென்றும் முள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமேமே.

## புராணம்

நண்ணினர்க் கிரியாய் ஓலம் நான நாயகனே ஓலம்
பண்ணவர்க் கிறையே ஓலம் பதஞ்சுடர் தேவே ஓலம்
எண்ணுதற்கரியாய் ஓலம் யாவையும் படைத்தாய் ஓலம்
கண்ணுதற் பெருமான் நல்கும் கடவுளே ஓலம் ஓலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

முந்தைத்தரு பத்தித் திரு நகை
அத்திக்கிறை சக்திச் சரவண
முத்திக் கொரு வித்துக்குருபர எனவோதும்
முக்கட் பரமத்துச் சுருதியின்
முற்பட்டது கற்பித்திருவரு
முப்பத்துமு வர்க்குத் தமரரு அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணை தொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப் பகல் வட்டத்திகிரியி விரவாகப்
பத்தற்கிர தந்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத் தொரு ரட்சித் தருள்வது ஒரு நாளே
நிரதித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப் பதம் வைத்துப் பயிரவி
திக் கொட கந டிக்கச் கழுபொடு கழுதாடக்
திக்பசி அட்டப் பயிரவர்
கொக்குத் தொரு கொக்குத் தொடு தொடு
சித்ரப்பவ ரிக்குத் தரிகடக என வோதக்
கொத்துப் பறை கொட்டக் களமிசை
குக்குக்கு குக்குக் குகுகுகு
குந்திப் புதை டிக்குக் பிடியென முது கூகை
கொட்புற்றெழ நட்பற்றவுளரை
வெட்டிப் பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொர வல பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிமளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவசந்தித் தோத்திரங்கள்

நவசந்தித் தோத்திரங்கள் கொடியேற்ற விழாவிலும் கொடியிறக்க வைபவத்தினன்றும் பாடுதற்காயன மூலமூர்த்திகள் யாவர்க்கும் " கணபதிதாளம் - தக்கராகம் உடைத்தாயன இருந்தும் ஒவ்வொரு மூர்த்திக்கும் விஷேடமாகப் பாடப்படும் ராகங்களும் உண்டு

## அவையாவன

| இறைவன் | தாளம் | பண் |
|---|---|---|
| பிள்ளையார் | கணபதி | தக்கராகம் |
| | மூஷிக்க | காந்தார பஞ்சமம் |
| சிவபெருமான் | விருஷப | காந்தார பஞ்சமம் |
| அம்மன் | சிம்மம் | சூட்டபாடை |
| | விருஷப | காந்தார பஞ்சமம் |
| முருகன் | மயூரம் | இந்தளம் |

**கொடிமரத்தடியில்**

**தாளம் – கணபதி** **பண் – தக்கராகம்** **சம்பந்தர் 235**

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிமரமருகில்

**பண் – தக்கராகம்** **சம்பந்தர் 470**

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோல மெலாஞ் செய்து பாச்சிலாச்
சிரா மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பே

**பண் – தக்கராகம் - சுந்தரர் - திருக்கோளிலி**

நீள நினைந்தடியேனுமை நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாளவள் வாடி வருந்தோமே
கோளிலியெம் பெருமாள் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை யெம் பெருமானவை யட்டித் தரப்பணியே.

**தாளம்: மூஷிகம் பண்:காந்தார பஞ்சமம் சம்பந்தர் 2834**

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினுமு னகழல் தொழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமா
றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ வுனதின் னருள்
ஆவடுதுறை அரனே.

## திருநாவுக்கரசர்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிமரமருகில்

**தாளம்: சிம்மம்** **பண்:நட்டபாடை** **சம்பந்தர்** **(1)**

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடையசுட லைப் பொடி பூசியென் னுள்ளமகவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட் பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

**சுந்தரர்**

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகரில்
பாவ வினையறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்
தேவன் எனை ஆள்வான் திருக்கேதீச்சரத்தானே.

**நட்டபாடை - திருக்கேதாரம் - சுந்தரர் 78/9016**

வாழ்வாவது மாயம் மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதாள்
தாழாதறஞ் செய்மின் தடங்கண் ணான் மலரோனும்
கீழ் மேலுறைநின்றான் திருக்கேதாரமெனீரே

**தாளம் : மயூரம்** **பண் : இந்தளம்** **சம்பந்தர்**

சடையா யெனுமால் சரண் நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே

**பண்: இந்தளம்** **சுந்தரர்** **7225**

பித்தாபிறை சூடிபெரு மானே யரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தொன்பால் வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தா உனக் காளாய் இனி அல்லேலென லாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரமதேவர் சந்தி (மத்தி)

**பண்: மேகராகக் குறிஞ்சி** **சம்பந்தர்** **1394**

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம் மேலுந்தி
அலமந்த போதாகவஞ்சேலென்
றருள் செய்வா னமருங் கோயில்
வலம் வந்த மடவார்க ணடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில் பார்க்குந் திருவையாறே.

**பண்: மேகராகக் குறிஞ்சி** **சம்பந்தர்** **1458**

செல்வ மல்கிய செல்வர் பராய்த்துறைச்
செல்வர் மேற் சிதை யாதன
செல்வன் ஞானசம் பந்தன் செந்தமிழ்
செல்வ மாமிவை செப்பவே.

**மேகராகக் குறிஞ்சி - சம்பந்தா - திருவையாறு**

வேந்தாகி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கு நெறிகாட்டும்
விகிர்தனாகி
பூந்தாமநறுங் கொன்றை சடைக் கனிந்த புண்ணியனார்
நண்ணும் கோயில்
காந்தார மிசையமைத்துக் காரிகையார் பண்பாடக் கவினார்
வீதிந்
தேந்தா மென்றரங்கேறிச் சேயிழையார் நடமாடுந் திருவையாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திர தேவர் சந்நி (கிழக்கு)

**பண்:காந்தாரம்** **சம்பந்தர்** **2178**

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்நிரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான்றிரு நீறே.

**திருநாவுக்கரசர்**

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடி சாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி யைம்புலனு மகத்தடக்கி
எப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே

**திருநாவுக்கரசர்**

மாதர்ப் பிறைக் ண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுபடாமல் ஐயாறடைகின்ற போது
காதல் மடப்பிடியோடு களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.

**'காந்தாரம் - சம்பந்தர் - திருவாலவாய் திருநீற்றுப்பதிகம் 2185**

இராவணன் மேலது நீறு வெண்ணத்தகுவது நீறு
பராவணமாவது நீறு பாவமறுப்பது நீறு
தராவணமாவது நீறு தத்துவமாவது நீறு
அராவணங்குந் திருமேனிஆலவாயான் திருநீறே.

## அக்கினி தேவர் சந்தி (தென் கிழக்கு)

**பண்: கொல்லி** **திருநாவுக்கரசர்**

கூற்றாயின வாறு விலக்ககலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாய் அடிக்கேஇர வும் பகலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியேன்
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை யம்மானே.

**சுந்தரர்**

தம்மையே புகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்கள்
இம்மையே தருஞ் சோறுங் கூறையும்
ஏத்த லாம் இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே

**பண்: கொல்லி தலம் : கோயில்(சிதம்பரம்) பாடியவர்: நாவுக்கரசர்**

திருச்சிற்றம்பலம் **4387**

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினாற் பக்தி செய்கே னென்னை நீயிகழ வேண்டாம்
முத்தனே முதல்வா தில்லையம்பலத்தாடுகின்ற
அத்தாவுன்னாடல் காண்பானடியனேன் வந்தவாறே

**பண் : கொல்லி தலம் : திருவாலவாய் பாடியவர் : சம்பந்தர் 3212**

ஆகமத்தொடு மந்திரங்களமைத்த சங்கத பங்கமாப்
பாகதத் தொடிரைத் துரைத்த சனங்கள் வெட்குறு பக்கமா
மாகதக்கரி போற்றிரிந்து புரிந்து நின்றுனுமாகூசேர்
ஆகதர்க் கெளியேனலேன் திருவாலவாயரனிற்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் : கொல்லி தலம் : திருக்கழுமலம் பாடியவர் : சம்பந்தர்

மண்ணில் நல்லவண்ணம்....."

நெடியவள் பிரமனுநினைப்பரிதாயவர்
அடியொடு முடியறியாவழலுருவினன்
கடிகமழ் பொழிலணிகழுமல வளநகர்ப்
பிடிநடையவளொடும் பெருந்தகையிருந்ததே.

## ஸ்தானம் இடம்

### யமதேவர் சந்தி (தெற்கு)

**பண் கௌசிகம் சம்பந்தர்**

ஆதியந்த மாயினாய் ஆலவாயின் அண்ணலே
சோதியந்த மாயினாய் சோதியுள்ளொர் சோதியாய்
கீதம் வந்த வாய்மையால் கிளர்தருக்கினார்க் கலால்
ஓதி வந்த வாய்மையால் உணர்ந்து ரைக்க லாகுமே.

**பண்: கௌசிகம் சம்பந்தர்**

காதலாகிக் கசிந்துண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொ ருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலாய வாயிலாய் பரவ நின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாய தென்ன கொள்கையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெற்கு

**பண் : கௌசிகம்   தலம் : பொது, நமச்சிவாயப்பதிகம்   பாடியவர்:சம்பந்தர்**

நந்தி நாம நமச்சிவாய வெனும்
சந்தையாற்றமிழ் ஞான சம்பந்தர் சொல்
சிந்தையாள் மகிழ்ந்தேத்தவல்லாரெல்லாம்
பந்த பாசமறுக்க வல்லார்களே.

## நிருதி தேவர் சந்தி (தென்மேற்கு)

**பண்:நட்டபாடை   சம்பந்தா   97**

உண்ணாமலை யுமையாளொடு
முடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை
திருமா மணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலை முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை
வழுவா வண்ணமறுமே.

## வருண தேவர் சந்தி (மேற்கு)

**பண்: சீகாமரம்   சம்பந்தர்   1928**

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமனா ருறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே

நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சா நாளும் வாழ் நாளுஞ் சாய்க் காட்டெம் பெருமாற்கே
பூநாளுங் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவி கேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதத்தை மிகப்பாடுமடியார்கள் குடியாகப்
பாதத்தைத தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே

## வாயு தேவர் சந்தி (வடமேற்கு)

**பண்: தக்கேசி** **சம்பந்தர்** **743**

பூவார் மலர்கொண் டடியார் தொழுவார்
புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்க ளெரித்தவன்று
மூவர்க் கருள் செய்தார்
தூமா மழைநின் றதிர வெருவித்
தொறு வின்னிரை யோடும்
ஆமாம் பிணைவந் தணையுஞ்சார
லண்ணா மலையாரே.

வேதமோதி வெண்ணூல் பூண்டு
வெள்ளை யெருதேறிப்
பூதஞ் சூழப் பொலிய வருவார்
புலியினுரி தோலார்
நாதாவெனவும் நக்காவெனவும்
நம்பாவென நின்று
பாதந் தொழுவார் பாவந்தீர்ப்பார்
பழன நகராரே.

**பண்: தக்கேசி** **சம்பந்தர்** **7848**

ஆலாந்தா னுகந்து அமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்துஞ்
சீலந்தான் பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏல வார்குல லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

**தக்கேசி - சம்பந்தர் - திருப்பழனை**

வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை யெருதேறிப்
பூதஞ் சூழ பொலிய வருவார் புலியினுரிதோலார்
நாதாவெனவுநக்கா வெனவு நம்பாவென நின்று
பாதந் தொடுவார் பாவந் தீர்ப்பார் பழன நகராரே.

## குபேர தேவர் சந்தி ( வடக்கு)

**பண்: தக்கராகம் சம்பந்தர் 360**

அடலே றமருங் கொடியண்ணல்
மடலார் குழலா ளொரு மன்னுங்
கடலார் புடை சூழ் தருகாழி
தொடர்வா ரவர்தூ நெறியாரே

**பண்: தக்கராகம் சம்பந்தர் 415**

அந்தமு மாதியுமாகிய வண்ண லாரழங்கை யமர்ந்திலங்க
மந்த முழவ மியம்ப மலைமகள் காண நின்றாடிச்
சந்தமிலங்கு நகுதலை கங்கை தண்மதியம் மயலே ததும்ப
வெந்த வெண்ணீறு மெய்பூசும் வேட்கள நன் கைராரே

## வடகிழக்கு

**பண்: சாலாபாணி**

இப்பண் அமைந்த மூவர் தேவாரம் எதுவும் இல்லை. அதனால் அதற்குப் பதிலாக, அப்பர் அருளிய சாதாரிப் பண்ணிலுள்ள தலையே நீ வணங்காய் என்னும் பாடலைப் பாடிவருவது சம்பிரதாயமாம். எனவே அதனை ஈசானதிக்கில் (வடகிழக்கில்) பாடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண் – சாதாரி – அப்பர் – 4240**

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையாலேபலி தேரின் தலைவனை
தலையே நீ வணங்காய்.

**பண் – சாதாரி – 4241**

கண்காள் காண்மின் களோ
கடல் நஞ்சுண்ட கண்டன் றன்னை
எண்டோள் வீசி நின்றாடும் பிரான் றனைக்
கண்காள் காமின் களோ.

**4243**

மூக்கே நீ முதலாய் - முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கைம ணாளனை
மூக்கே நீமுதலாய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோயிற் குடமுழுக்கின் போது
## திருக்கதவம் திறக்குமாறு ஓதப்படுவது
### தலம் – திருமறைக்காடு அப்பர் தேவாரம்

**பண்: திருக்குறுந்தொகை**

**இராகம்: நாதநாமககிரியை அல்லது மாயாமாளவகௌளம்**

**தாளம்: ஆதி**

திருச்சிற்றம்பலம்

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம் மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே 5321 - 1

ஈண்டு செஞ்சடை யாகத்துள் ஈசரே
மூண்ட கார்முகி லின் முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரே அருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே. 5322 - 2

அட்டமூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட விக்கத வந்திறப் பிம்மினே. 5323 - 3

அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்மரஞ் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடை விருத்தரோ
பெரிய வான் கத வம்பிரி விக்கவே. 532 - 4

மலையில் நீடிருக் கும்மறைக் காடரே
கலைகள் வந்திறைஞ் சுங்கழல் ஏத்தரோ
விலையில் மாமணி வண்ண வுருவரோ
தொலைவி லாக்கத வந்துணை நீக்குமே. 5325 - 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்குந் தாழை புறணி அருகெலாம்
ஆக்குந்த தண்பொழில சூழ்மறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீரடி கேளுமை யீரடி
நோக்கி காணக் கதவைத் திறவுமே. 6

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தரோ
அந்த மில்லி அணிமறைக் காடரோ
எந்தை நீஅடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே. 7

ஆறு சூடும் அணிமறைக் காடரோ
கூறும் மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய எம் பெரு மான் இந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே. 8

சுண்ண வெண்பொடிப் பூசுஞ் சுவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ண லாதி அணிமறைக் காடரோ
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே. 9

விண்ணு ளார்விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணு ளார்வாணங் கும் மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 10

அரக்க னைவிர லால்அடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீர் எம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க இக்கத வந்திறப் பிம்மினே 5331 - 1

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லையில் அருளியது
# ஆனந்த மனோலயம்

## அறுசீர் விருத்தம்
# திருப் பொற் சுண்ணம்

முத்துநற் றாமம் பூமாலை தூக்கி
முளைக்குடந் தூபநற் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும்பார் மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே 01

பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கண் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண்டர் புறநிலாமே
குனிமின் றொழுமின்னெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. 02

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தர மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற் சுண்ண மிடித்துநாமே. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்க ளுலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. 04

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற்றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்க வொட்டோஞ்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே 05

உலக்கைபல வோச்சு வார்பெரியர்
உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்து நின்றார்
காண வுலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை யாண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ண மிடித்துநாமே. 06


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வளை யார்ப்பவார்ப்பத்
தொண்டர்குழா மெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்ப
நாமுமவர் தம்மை யார்ப்பவார்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்னகோவுக்
காடப் பொற்சுண்ண மிடித்துநாமே. 07

வாட்டங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நன்மையின்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற் சுண்ண மிடித்துநாமே. 08

வையக மெல்லா முரலதாக
மாமேரு வென்னு முலக்கை நாட்டி
மெய்யெனு மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொ னுலக்கை வலக்கைபற்றி
ஐய னணிதில்லை வாணனுக்கே
ஆடப் பொற் சுண்ண மிடித்துநாமே. 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணி கொங்கைக ளாட வாட
மொய்குழல் வண்டின மாட வாட
சித்தஞ் சிவனொடு மாட வாடச்
செங்கையற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடு மாட வாடப்
பிறவி பிறரொடும் மாட வாட
அத்தன் கருணையொ டாடவாட
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 10

மாடு நகைவா ணிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவளந் துடிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமினெம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமி னம்பலத் தாடினானுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோட்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமைய னெம்மையன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே 13

சங்க மரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை யிரைப்ப அராவிரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடிந்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரு மிம்பரு உய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிச் சுண்ண மிடிந்துநாமே. 17

அயன்றலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்க னெயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலா லுதைத்தல்பாடி
இயைந்தன முப்புர மெய்தல்பாடி
ஏழையடியோமை யாண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடிந்துநாமே. 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட மலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின்றாடும் மரவம்பாடி
ஈசற்குச் சுண்ண மிடிந்துநாமே. 19

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினார்க்
காதியு மந்தமு மாயினாருக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 20

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிக்கவி

மெய்கண்டசாத்திரம் பதினான்கினுள் கொடிக்கவியும் ஒன்று.அதனைப் பாடியவர் உமாபதி சிவாசாரியார். மகோற்சவத்தின் முதல் நாள் கொடியேற்றத் திருவிழாவாகும். கோயில் என்று சிறப்பாக அழைக்கப்படும் சிதம்பரத்திலே ஏறாதுநின்ற கொடியை ஏற்றுவிப்பதற்காகப் பாடப்பட்டதே கொடிக்கவி.

கொடியேற்றும் போது இக்கவியைப் பாடுவது மரபு. இக்கவியைப் பஞ்சாட்சர பாசுரம் எனவும் அழைப்பர். கி.பி. 1310 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டதாகக் கூறுவர். கொடித்தம்ப விளக்கமும், கொடியேற்ற விளக்கமும் விரிவஞ்சி விடப்பட்டுள்ளது.ஆலய வாயிற்கோபுரத்திலும் கொடிகட்டுவதுண்டு.

கட்டளைக் கலித்துறை

**ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றேஇடம் ஒன்று மேலிடில் ஒன்று**
**ஒளிக்கும் எனினும் இருளடராது உள்ளுயிர்க் குயிராய்த்**
**தெளிக்கும் அறிவு திகழ்ந்துளதேனுந் திரிமலத்தே**
**குளிக்கும் உயிரருள் கூடும்படி கொடிகட்டினனே.**

பொழிப்புரை: ஆணவத்திற்கு ஞானத்திற்கும் இடம் ஒன்றே. ஞானம் மேலிடும் பொழுது, ஆணவம் ஒளித்து நிற்கும்: ஆணவம் மேலிடும் போது ஞானம் ஒளித்து நிற்கும்: எனினும் ஞானத்தை ஆணவம் பொருந்தாது, பழைய வாசனாவிசேடத்தால் உள்ளே கிடந்த சிவஞானம்சற்று விளங்குமானாலும் மும்பலங்களிலே மூழ்கிக்கிடக்குமல்லாமல் அதைக் கொண்டு நீங்க மாட்டாது. மும்மலங்களில் மூழ்கிக்கிடக்கும் ஆன்மா அருள்பெற்று மோட்சம் அடைவதற்காகவே கொடிகட்டினேன்.

ஒளியும் இருளும் ஒன்றற்கொன்று எதிரானவை. ஆன்மா, பாசமும் சிவமும் ஒன்றாய் இருப்பதற்கு இடமானது: ஆதலால் ஒளிக்கும் இருளுக்கும் இடம் ஒன்றெனப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரிசை வெண்பா

**பொருளாம் பொருளேது போதேது கண்ணே (து)**
**இருளாம் வெளியே(து) இரவே(து) - அருளாளா**
**நீபுரவா வையமெல்லாம் அறியக் கட்டினேன்**
**கோபுர வாசற் கொடி**

தோன்றி ஒடுங்காது, என்றும் ஒன்று போல் எங்கும் நிறைந்து நிற்கும். பொருள் எது? சக்தியானது, ஆன்மா ஏது, அஞ்ஞானமாகிய கேவல, சகல நிலை எது? அருளையுடையவனே தேவரீர் பாதுகாக்கின்ற இந்த உலகமாகிய மல மாயை, கன்மங்களிலே பொருந்தாமல், ஆன்மாக்களிடமாகப் பொருந்தியிருக்கின்ற உன்னுடைய திருவருள் அடியவர்களாகிய எமக்கு உணர்த்தியருள அதனை அறிந்து நாமுய்யக் கோபுரவாசலிலேகொடி கட்டினேன்.

(கருப்பக் கிருகத்திலுள்ள மூர்த்தம் கோபுரவாசலிலே கொடி கட்டிய பின் வெளியே தோன்றி நமக்கு அருள்புரியும்)

நேரிசை வெண்பா

(திருவருளை வேண்டுதல்)

**வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்**
**தாக்கா உணர்வரிய தன்மையனை - நோக்கிப்**
**பிரித்தறிவு தம்மிற் பிரியாமை - தானே**
**குறிக்கும் அருள் நல்கக் கொடி.**

வாக்காலும், பெரிய மனத்தினாலும், காயத்தினாலும் எப்பொழுதும் எட்டி அறிவதற்கு அரிதாகிய தன்மை உடையவனை, விசாரித்துப் பார்த்து, பகுக்குமிடத்து அறிவினிடத்திலே அறிவாயிருக்கின்ற சிவத்தைப் பிரியாமற் குறித்து அருளைப் பெறத்தக்கதாகக் கொடி கட்டினேன்.

சிவனைப் பொருந்திய ஆன்மா சிவமேயாய் நீங்காமல் அவன் சேவடியில் இணைந்து கிடக்கும்.இதுவே பேரின்பம். ஆயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா பஞ்சகிருத்தியம் செய்யாது, கொடித் தம்பத்தை விடாது பற்றி ஏறிக்கிடத்தல் போல, ஆன்மா சிவனை பற்றிக்கிடக்கும். கொடி ஏற்றம் என்பது அருளைப் பெறுதல் என்பதாம். பசு ஞானத்தாலும், பாச ஞானத்தாலும் பதியை அடையமுடியாது. பதிஞானம் ஒன்றே பதியை அடையத் துணைபுரியும்.

நேரிசை வெண்பா

(பஞ்சாட்சர தியானம்)

**ஐஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெத்தும்**
**பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சமுழுத்திப்**
**பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்**
**கூசாமல் காட்டக் கொடி.**

"சிவாயநம" என்கின்ற ஐஞ்செழுத்தும், "ஓம், ஆம், அவ்வும், சிவாயநம" என்கின்ற எட்டெழுத்தும்,"ஓம் நமசிவாய" என்கின்ற ஆறெழுத்தும், " ஓம் சிவாய. என்கின்ற நாலெழுத்தும், ஆக இப்படி உச்சரிக்கும் விதிப்படியே உச்சரித்து பஞ்சாட்சரத்தின் சொரூபத்தை அறிந்து பிஞ்செழுத்தென்னும் "வ" கரமாகிய சக்தியையும், பெருவெழுத்தென்னும் "சி" கரமாகிய சிவத்தையும் தனது இதயத்திலே வைக்கின், பேசும் எழுத்தாகிய "வ " கரமாகிய சக்தி பேசா எழுத்தாகிய "சி" கரமாகிய சிவத்தை இரண்டறக் கூசாமல் அழுத்தக் கொடி கட்டினேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| சி | வா | ய | ந | ம |
| பதி | பசு | பாசம் | | |

பஞ்சாட்சரம் முப்பொருள் உண்மை பற்றி விளக்குகின்றது. ஐந்தெழுத்தின் மூலமே இறையருளையும் இறைவனையும் அடையலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ந | ம | சி | வா | ய | தூல பஞ்சாட்சரம் |
| திரோதம் | மலம் | சிவம் | சக்தி | ஆன்மா | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி வா ய ந ம சூக்கும பஞ்சாட்சரம்
சிவம் அருட்சக்தி ஆன்மா திரோதம் மலம்

ஐந்செழுத்தை நெஞ்சழுத்தத் திருவருள் கைகூடும். ஆரம்பத்திலே நமச்சிவாய என்று தியானித்துப் பழகி பக்குவம் அடையும் பொழுது சிவாயநம எனத் தியானித்து இறைபதம் அடையலாம். சிவாயநம என்று சிந்திப்போருக்கு அபாயம் இல்லை என்பர் ஔவையார்.

கொடிக்கவிப் பாடல்கள் நமக்கு, உயிர் அருளைக் கூடுதற்கு இப்பிறப்பில் முயலவேண்டுவது அவசியம் என்பதை அறிவுறுத்துகின்றன. இம்மையிலே சிவானந்தப்பேறு துய்த்து மகிழ வேண்டும் என்பதையும் இந்த நான்கு பாடல்களும் உபதேசிக்கின்றன்

கோகழியாண்ட குருமனிதன் திருவருள் துணையாகுக

சி.வேலாயும் - அதிபர்
சைவப்புலவர் - சித்தாந்தப் பண்டிதர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனை வாழும் வாழ்க்கையும் நினைப் பொழி

பதியும் சுற்றமும் பெற்ற மக்களும்'

பண்டையரல்லர் பெண்டிரும்

நிதியில் இம்மனை வாழும் வாழ்க்கையும்

நிணைப் பொழி மட நெஞ்சமே

மதியம் சேர் சடைக் கங்கை யானிடம்

மகிழும் மல்லிகை செண்பகம்

புதிய பூமலர்ந்த தெல்லிநாறும்

புறம் பயந் தொழுப் போதுமே

சுந்தரர் - 35 - 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சிந்தனைக்கு...

| | | |
|---|---|---|
| 1 - மிக நல்லநாள் | - | இன்று |
| 2 - மிகப்பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| 3 - மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| 4 - மிகப் பெரிய தேவை | - | சமயோசித புத்தி |
| 5 - மிகவும் கொடிய நோய் | - | பேராசை |
| 6 - மிகவும் சுலபமானது | - | குற்றங்காணல் |
| 7 - கீழ்த்தரமான விடயம் | - | பொறாமை |
| 8 - நம்பக்கூடாதது | - | வதந்தி |
| 9 - இளமையில் தேவை | - | கல்வி |
| 10 - செய்யக்கூடாதது | - | உபதேசம் |
| 11 - செய்ய வேண்டியது | - | உதவி |
| 12 - விலக்க வேண்டியது | - | விவாதம் |
| 13 - உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| 14 - நழுவவிடக்கூடாதது | - | வாய்ப்பு |
| 15 - ஆபத்தினை விளைவிப்பது | - | அதிக பேச்சு |
| 16 - உருகும் உள்ளத்தில் உதிப்பது | - | அன்பு |

லெட்சுமி ஒவ்செற் பிறின்டர்ஸ் நெல்லியடி- 0214909133

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org